**செய்தி வெளியீடு எண் : 233** **நாள்: 13.02.2022**

**<u>செய்தி வெளியீடு</u>**

இலங்கைக் கடற்படையால் தமிழ்நாட்டு மீனவர்கள் மீண்டும் மீண்டும் அச்சுறுத்தப்படுவதும் தாக்கப்படுவதுமான நிகழ்வுகள் தொடர்ந்து வரும் நிலையில், இன்று (13-2-2022) மேலும் ஒரு நிகழ்வாக 12 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளது குறித்து உடனடியாகத் தலையிட்டு நடவடிக்கை மேற்கொள்ளக் கோரி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (13-2-2022) மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களுக்குக் கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில், இலங்கைக் கடற்படையால் தமிழ்நாட்டு மீனவர்கள் மீண்டும் மீண்டும் அச்சுறுத்தப்படுவதும் தாக்கப்படுவதுமான நிலையில், அதுகுறித்து மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புவதாகவும், இன்று (13-2-2022) மற்றுமொரு நிகழ்வாகத் தமிழ்நாட்டின் இராமேஸ்வரத்தைச் சேர்ந்த பன்னிரண்டு மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும், இத்தகைய அச்சமூட்டும் சம்பவங்கள் தொடர்ந்து நிகழ்வது தமிழ்நாட்டு மக்களுக்கு ஆழ்ந்த துயரத்தை ஏற்படுத்துகிறது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

12.02.2022 அன்று, IND-TN-10-MM-612 மற்றும் IND-TN-10-MM-328 ஆகிய பதிவெண்களைத் தாங்கிய இரண்டு இயந்திர மீன்பிடிப் படகுகளில் மீனவர்கள் ராமேஸ்வரம் தளத்திலிருந்து மீன்பிடிக்கக் கடலுக்குள் சென்ற நிலையில், 13.02.2022 அதிகாலையில் இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்டு தலைமன்னாருக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர் என்று தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

கடந்த இரண்டு வாரங்களில் இவ்வாறு நடந்துள்ள மூன்றாவது சம்பவம் இது என்பதையும், தற்போது வரை, தமிழ்நாட்டைச் சேர்ந்த மீனவர்கள் 41 பேரும் 6 மீன்பிடிப் படகுகளும் இலங்கைக் கடற்படையின் வசம் உள்ளதையும் சுட்டிக்காட்டியுள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இதுபோன்று மீனவர்கள் மீண்டும் மீண்டும் கைது செய்யப்படுவதும் துன்புறுத்தப்படுவதுமான நிகழ்வுகள் தமிழ்நாட்டின் மீனவர் சமூகத்திடையே, குறிப்பாக பாக் வளைகுடாப் பகுதியில் பாதுகாப்பின்மை உணர்வை ஏற்படுத்தியுள்ளதுடன் மீனவர்களின் வாழ்வாதாரங்களை மோசமாகப் பாதித்துள்ளதாகவும் தனது கடிதத்தில் அவர் தெரிவித்துள்ளார்.

ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் கூட்டு முயற்சிகளின் வாயிலாக, நீண்ட காலமாகத் தொடர்ந்து வரும் இந்த எரிச்சலூட்டும் சிக்கலுக்கு நிலையான தீர்வைக் காண வேண்டியது மிகவும் இன்றியமையாதது என்றும், அதன் தொடக்கமாக இருதரப்புப் பேச்சுவார்த்தைகளைக் கூட்டுவதற்கான ஆலோசனைகள்

மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும், கோவிட் தீவிரம் குறைந்துள்ள தற்போதைய நிலையில், கூட்டுச் செயற்குழுக் கூட்டம் (JWG) மூலம் பேச்சுவார்த்தைகளை உடனடியாக மீண்டும் தொடங்க வலியுறுத்துமாறும் மாண்புமிகு இந்திய பிரதமரைக் கேட்டுக்கொள்வதாக முதலமைச்சர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். மேலும், அப்பகுதியில் பதற்றத்தைக் குறைக்கும் வகையில் இரு நாட்டு மீனவர்களுக்கு இடையிலான பேச்சுவார்த்தைக்கும் வழிவகை செய்திட வேண்டுமெனக் கோரியுள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டைச் சேர்ந்த 41 மீனவர்களை விடுவிக்க உடனடியாக நடவடிக்கைகளை விரைவுபடுத்துமாறும் பிரதமர் அவர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.

- - - -

**P.R.No:233** **Date:13.02.2022**

**Text of the D.O. Letter No. 904/CMO/2022, Dated 13-02-2022 of Thiru M.K. Stalin, Hon'ble Chief Minister of Tamil Nadu addressed to Thiru Narendra Modi, Hon'ble Prime Minister of India**

Vanakkam.

I wish to bring to your immediate attention, the repeated instances of intimidation and attack on fishermen from Tamil Nadu by the Sri Lankan Navy. Today, yet another incident has been reported and twelve fishermen from Rameshwaram have been apprehended. Such incidents are happening with alarming regularity, causing deep distress to the people of Tamil Nadu.

The fishermen had ventured out for fishing from Rameswaram base in two mechanised fishing boats bearing Registration No.IND-TN-10-MM-612 and IND-TN-10-MM-328 on 12.02.2022. They were arrested by the Sri Lankan Navy in the early hours of 13.02.2022 and taken to Thalai Mannar.

This is the third such incident in two weeks and 41 fishermen and six fishing boats are in the custody of the Sri Lankan Navy. The repeated instances of arrests and harassment have caused a sense of insecurity in the fishermen community of Tamil Nadu, particularly in the Palk Bay area and have adversely affected their livelihoods.

It is extremely vital to find a lasting solution to this vexatious and long-pending issue through the collaborative efforts of the Union and State Governments. As a preliminary step, consultations may be initiated to convene bilateral talks. As the Covid situation has eased, I request you to

press for the resumption of deliberations through the Joint Working Group Meeting (JWG) immediately. Further, talks between the fishermen of the two countries may also be facilitated to ease the tension in the area. I also urge you to take immediate steps to expedite the release of 41 fishermen from Tamil Nadu.

- - - -

**Issued By: - DIPR, Secretariat, Chennai - 9.**